1986 நவம்பர் 24]

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயரால் மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன் மொழிந்த இந்தத் தீர்மானத்தை இந்து முன்னணிப் பேரியக்கத்தின் சார்பாக வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்ற 1986-ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்தி நான்காவது திருத்த) சட்ட முன் வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ் வரும் திருத்தங்களுக்கு, இப்பேரவை ஏற்பளிக்கின்றது".

அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை, 25-11-1986 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-54 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

40. 1972–73-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகம்) அறிக்கையிலுள்ள தமிழ் நாடு மின்சார வாரியம் தொடர்பான குறிப்புரைகளின்மீது பொது நிறுவனங்கள் குழு (1982-83) அளித்த இருபத்து இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஆறாவது அறிக்கை.

TRUTH ALONE TRIUMPHS

41. 1970-71 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்கள் குறித்த பத்திகள் மீதான குழுவின் (1980-81) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள (வணிகத் துறைகள் பற்றிய) பரிந்துரைகளின் மீது அரசு மேற் கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஏழாவது அறிக்கை.